# திராவிடத்தால் வாழ்கிறோம்

1073

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

---

# கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

38

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

# முடிவுக்கு வந்த 50 ஆண்டு போராட்டம்



**2024** செப்டம்பர் 9-ஆம் தேதி, சென்னை ரேஸ் கிளப் இயங்கிவந்த நிலத்தை, தமிழ்நாடு அரசு முறையாகக் கையகப்படுத்தி, கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது. காவல் துறை உதவியுடன், அந்த நிலத்தினை மீட்ட வருவாய்த்துறை அலுவலர்கள், உடனடியாக குதிரைப் பந்தய மைதானத்தைச் சுற்றி, 'இந்த நிலம் அரசுக்குச் சொந்தமானது, கையகப் படுத்தப்பட்டது' என்ற அறிவிப்புகளை வைத்தனர். மேலும், குதிரைப் பந்தய மைதானத்திற்குள் உள்ள அலுவலகக் கட்டடங்கள், நிர்வாகக் கட்டடங்கள் அனைத்தும் சீல் வைக்கப்பட்டன. ஒரே நாளில் அனைத்தும் மாறின. அதற்குக் காரணங்கள் இல்லாமல் இல்லை.

இந்த நிலத்தைக் கையகப்படுத்துவதற்குப் பின்னால், 50 ஆண்டுக்கால சட்டப் போராட்டம் நடந்தது. ஆனால், சட்டம் வழங்கிய வாய்ப்புகளால், பல நூறு கோடி ரூபாய் மதிப்புள்ள அரசு நிலத்தை தனியார் சிலர் அனுபவிக்கும் நிலை ஏற்பட்டது. இப்போது, திராவிட மாடல் ஆட்சியில் அந்த நிலம் உறுதியான சட்டப்போராட்டங்களால் மீண்டும் அரசு வசம் வந்துள்ளது.

இப்போதும், சென்னை ரேஸ் கிளப் நிர்வாகம் சட்ட வாய்ப்புகளைப் பயன்படுத்தாமல் இல்லை. தமிழ்நாடு அரசு அனுப்பிய அறிவிப்பாணைக்கு எதிராக ரேஸ் கிளப் சென்னை உயர் நீதிமன்றத்துக்குச் சென்று முதலில் தடையாணை பெற்றது.

இந்தத் தடையாணைக்கு எதிராகத் தமிழ்நாடு அரசு மேல்முறையீடு செய்தது. நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், முகமது ஷஃபீக் அமர்வில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது. தமிழ்நாடு அரசின் சார்பில் 2014-ஆம் ஆண்டுக்குப் பின்னர், 2024-ஆம் ஆண்டு வரையில் உள்ள நிலுவைகள் அனைத்தும் 12 ஆயிரத்து 381 கோடி ரூபாய் செலுத்த வேண்டும் என வாதம் வைக்கப்பட்டது. இரண்டு தரப்பையும் விசாரித்த நீதிபதிகள், 1970-ஆம் ஆண்டில் இருந்து 2014-ஆம் ஆண்டு வரையில் செலுத்த வேண்டிய 730 கோடியே 86 லட்சத்து 81 ஆயிரத்து 297 ரூபாயை ஒரு மாதத்திற்குள் செலுத்தும்படி, ரேஸ் கிளப் நிர்வாகத்துக்கு உத்தரவிட்டனர். இந்தத் தொகையைச் செலுத்தத் தவறினால் ரேஸ் கிளப் நிர்வாகத்தை வெளியேற்றி, நிலத்தைக் கையகப்படுத்தலாம் என்றும், அந்த நிலத்தை அரசு பொதுப் பயன்பாட்டிற்குப் பயன்படுத்தலாம் எனவும் உத்தரவு பிறப்பித்தனர்.

### நீதிமன்றப் படிக்கட்டுகள்

இந்த உத்தரவை எதிர்த்தும் ரேஸ் கிளப் நிர்வாகம் உச்ச நீதிமன்றத்துக்குச் சென்றது. அந்த மேல்முறையீட்டு வழக்கு நிலுவையில் இருந்த நிலையில், உயர் நீதிமன்றம் அறிவித்த ஒரு மாதத்தில் ரேஸ் கிளப் உரிய தொகையைச் செலுத்தவில்லை என்பதால், ரேஸ் கிளப் மைதானத்திற்கு வருவாய்த்துறை அதிகாரிகள் சீல் வைத்ததுடன், அதற்கான அறிவிப்பையும் வைத்தனர். பசுமைத் தீர்ப்பாயத்தின் பரிந்துரையுடன், அங்கு நீர்நிலைகளை அமைப்பதற்கான பணிகளையும் தொடங்கினர்.

தமிழ்நாடு அரசின் இந்த அதிரடி நடவடிக்கைக்கு எதிராக ரேஸ் கிளப் மீண்டும் உயர் நீதிமன்றத்தை அடுத்த நாளே நாடியது. இந்த வழக்கு, அவசர வழக்காக நீதிபதிகள் எஸ்.எஸ்.சுந்தர், ராஜசேகர் ஆகியோர் முன் விசாரணைக்கு வந்தது. ரேஸ் கிளப் சார்பில், உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு உள்ள நிலையில், குத்தகையை ரத்து செய்து அரசு பிறப்பித்த உத்தரவு செல்லாது என்றும், உரிய அவகாசம் கொடுக்காமல் சுவாதீனம் எடுத்தது சட்டவிரோதமானது எனவும், குதிரைகள், பணியாளர்கள் நலனை அரசு கணக்கில் கொள்ளவில்லை என்றும் வாதிட்டனர்.

### பசுமைப்பூங்கா உருவாக்கம்

அரசு தரப்பில், கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர், மூத்த வழக்கறிஞர் பி.வில்சன், அரசு தலைமை வழக்கறிஞர் பி.எஸ்.ராமன் ஆகியோர் வாதிட்டனர். 'அனுமதி பெறாமல் அங்கு குதிரைப் பந்தயம், மண்டபம் நடத்தப்பட்ட நிலையில், இப்போது பொது மக்களின் பயன்பாட்டுக்கு அந்த நிலம் கொண்டு வரப்பட்டுள்ளது. அந்த இடத்தில், வேளச்சேரியில் ஏற்படும் வெள்ளப்பாதிப்பைத் தடுக்க நீர்நிலையுடன்கூடிய பசுமைப்பூங்கா அமைக்கலாம்' எனப் பசுமைத் தீர்ப்பாயம் அளித்த பரிந்துரையையும் தாக்கல் செய்தனர்.

அதே நேரத்தில், குத்தகை ரத்து குறித்து நோட்டீஸ் அளித்து, காலி செய்ய உரிய அவகாசம் வழங்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளது, அதைப் பின்பற்றித்தான் அரசு அந்த நிலத்தை கையகப்படுத்தியது என்றும் தெளிவுபடுத்தினர்.

இந்த வாதங்களைக் கேட்ட நீதிபதிகள், பொதுநலன் கருதி அரசின் திட்டங்களைத் தொடரலாம் எனத் தீர்ப்பு அளித்தனர். குறிப்பாக, மழைநீர் சேமிப்பு உள்ளிட்ட பணிகள் நடத்தத் தடையில்லை எனக் குறிப்பிட்டு, அரசுக்கு பச்சைக்கொடி காட்டினர். இதற்கிடையே, அரசின் கையகப்படுத்தும் நடவடிக்கைக்கு எதிராக ரேஸ் கிளப் சார்பில், உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவில் தலையிட உச்ச நீதிமன்றமும் மறுப்பு தெரிவித்து. 'சென்னை உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில் தலையிட விரும்பவில்லை. ஏதேனும் மாற்றங்கள், விளக்கங்கள் தேவைப்பட்டால், சென்னை உயர் நீதிமன்றத்தை அணுகி முறையிடலாம்' என்று கூறிவிட்டது.

> கடந்த ஓராண்டில், திராவிட மாடல் அரசின் இடைவிடாத சட்டப் போராட்டங்களால், 160 ஏக்கர் நிலம் அரசின் வசம் வந்தது.

இப்படி கடந்த ஓராண்டில், திராவிட மாடல் அரசின் இடைவிடாத சட்டப் போராட்டங்களால், 160 ஏக்கர் நிலம் அரசின் வசம் வந்தது. மீட்கப்பட்ட நிலத்தில், 4.60 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட 4 குளங்கள் முதலில் அமைக்கப்பட்டன. பின்னர், குளங்களை அகலப்படுத்தி 8 மில்லியன் கன அடி நீரை சேமிக்கும் குளங்களை உருவாக்கியது. அங்கு, பசுமைப்பூங்கா உருவாக்குவதற்காக ரூ.4,832 கோடி மதிப்பிலான 118 ஏக்கர் நிலம் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறைக்கு நிலமாற்றம் செய்து உத்தரவிடப்பட்டது.

நிலத்தைக் கையகப்படுத்திய அன்று தமிழ்நாடு அரசு வெளியிட்ட அறிவிப்பில், 'பூங்காக்கள் மக்களின் உடல், மனநல ஆரோக்கியத்துக்குக் குறிப்பிடத்தக்க அளவில் பங்களிக்கின்றன. மனஅழுத்தம், மனச்சோர்வு, பதற்றம் ஆகியவற்றைக் குறைத்து, மன அமைதியைப் பூங்காக்கள் தருகின்றன. சிறார்கள் ஓடியாடி விளையாடுவதற்குப் போதுமான இடவசதியை அளிக்கும். நகரத்தின் வெப்பமான சூழலைத் தணிக்கும் மற்றும் வெள்ளப் பாதிப்பினைக் குறைக்கும். மாநகரத்தின் மக்கள்தொகைப் பெருக்கத்துக்கு ஈடுகொடுத்திடும் வகையில் மிகச்சிறந்த சுற்றுச்சூழல் பூங்கா ஒன்றினை சென்னையின் மத்தியப் பகுதியான கிண்டியில் நிறுவுதல் மிக அவசியமானது. இங்கு அமைக்கப்படவுள்ள பூங்காவானது, மக்களது மன மகிழ்ச்சிக்கும் அமைதிக்கும், ஓய்வுக்கும் ஒட்டுமொத்த வாழ்க்கைத் தரத்தை மெருகேற்றுவதற்கும் வழிவகுக்கும்' எனச் சொன்னது.

சொன்னதுபோலவே 2025 நவம்பர் 1-ஆம் தேதி, அங்கு பூங்கா அமைப்பதற்கான பணிகளைத் தொடங்கிவைத்தார் நம் முதலமைச்சர் திராவிட மாடல் நாயகர். முத்தமிழறிஞர் கலைஞர் 1970-ஆம் ஆண்டு தொடங்கிய சட்டப்போராட்டத்தினை 2025-ஆம் ஆண்டு முடித்து வைத்து, மக்களின் மகிழ்ச்சிக்கு வழிவகுத்தது திராவிட மாடல் அரசு.

...தொடரும்

---

## முத்தமிழறிஞர் பதிப்பகம் அரங்கு எண் - 352

தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கம் நடத்தும் 49-வது சென்னை புத்தகக் காட்சியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நாளை தொடங்கிவைக்கிறார். சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் ஜனவரி 8 முதல் 21 வரை 14 நாட்கள் இந்தப் புத்தகக் காட்சி நடைபெறவுள்ளது. ஆயிரத்திற்கும் மேற்பட்ட அரங்குகளில் 12 லட்சத்துக்கும் மேற்பட்ட தலைப்புகளில் நூல்கள் காட்சிக்கு வைக்கப்படுகின்றன. அனைத்து நாட்களிலும் காலை 11.00 மணி முதல் இரவு 8.30 மணி வரை பொதுமக்கள் பார்வையிட்டு நூல்களை வாங்கலாம். நுழைவுக்கட்டணம் கிடையாது.

சிங்கப்பூர், மலேசியா, இலங்கை போன்ற நாடுகளில் இயங்கும் தமிழ்ப் பதிப்பகங்கள் மற்றும் பென்குயின், ஹார்ப்பர் காலின்ஸ் போன்ற சர்வதேச நிறுவனங்களும் பங்கேற்கின்றன. ஆசியாவின் மிகப் பெரிய அறிவுத் திருவிழாவாக நடைபெறும் இந்த சென்னைப் புத்தகக் காட்சியில் முத்தமிழறிஞர் பதிப்பகம், அரங்கு எண் 352-இல் இடம்பெறுகிறது. தி.மு.க. இளைஞர் அணி நடத்திய அறிவுத் திருவிழாவில், முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டு பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள 'காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு' நூல், புத்தகக் காட்சி அரங்கில் கிடைக்கும்.

அதேபோல முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் பிற வெளியீடுகளான தி.மு.க. வரலாறு, மாநில சுயாட்சி முழக்கம், திராவிட இயக்க வரலாறு, இந்தியாவில் சமூக நீதியும் இடஒதுக்கீடும், இந்தித் திணிப்பை ஏன் எதிர்க்கிறோம்?, இந்தியாவுக்கு வழிகாட்டும் திராவிட மாடல், இளைய திராவிடம் எழுகிறது, தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும், திராவிடத்தால் வாழ்கிறோம், திராவிட மாடல் அரசு, திராவிடப் போராளிகள், இடம் பொருள் கலைஞர், கலைஞரும் நானும், கலைஞர் இயக்கவியல், திராவிட சினிமா, உடன் பிறப்பே, தி.மு.க. இளைஞர் அணி அத்தியாயம்-1, டாக்டர் கலைஞர் ஆகிய நூல்களும் முத்தமிழறிஞர் பதிப்பக அரங்கில் கிடைக்கும்.

---

## ஃப்ளாஷ்பேக்



### 'முரசொலி' விற்பனையில் 40 ஆண்டுகள்!



தே.தனசேகரன்

2019-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் 'நினைவில் வாழும் கலைஞர்' நூல் வெளியிடப்பட்டபோது, இன்றைய கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமிருந்து ரூ.1000 செலுத்தி சிறப்புப் பிரதியைப் பெற்றேன். 40 ஆண்டுகளாகக் கழகப் பணியும், 'முரசொலி' நாளிதழ் விற்பனையாளராகவும் செயல்பட்டு வருகிறேன். இன்றும் என்னை இயக்கிக்கொண்டிருக்கும் கழக உணர்வோடு, 2026 தேர்தல் பணிகளில் ஈடுபட்டு வருகிறேன்.

**– தே.தனசேகரன்,**
**கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை துணை அமைப்பாளர்,**
**அண்ணா நகர் தெற்குப் பகுதி, சென்னை மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

---

## கருவூலம்

### போராட்ட இரயில் இடையில் நிற்காது!

1963-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22-ஆம் தேதி நெல்லையில் நடைபெற்ற பாண்டிய மண்டல இந்தி எதிர்ப்பு மாநாட்டில் உரையாற்றிய பேரறிஞர் அண்ணா, "போராட்ட இரயில் புறப்பட்டுவிட்டது. இந்தி ஆதிக்கம் நீடிக்கிறவரை இடையில் அது நிற்காது!" என முழங்கினார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24-26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131